31st January 1972]

மாண்புமிகு டாக்டர் இரா. நெஞ்செழியன் : தலைவர் அவர்களே, 30—7—71 லிருந்து உத்தரவிடப்பட்டிருக்கிறது.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியில் டைரக்டரால் சாங்ஷன் செய்யப்பட்ட செகண்டரி, ஹையர் கிரேடு ஆசிரியர்கள் வேலைக்கான இடங்கள் ஒதுக்கப்பட்டும் அவற்றில் இன்னும் "அப்பாயின்ட்மெண்ட்" செய்யப்படாமலிருப்பது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தனிக் கேள்வி வேண்டும்.

Pension

* 68 *Q.*—Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether orders giving effect to the formula of increased pension by addition of Dearness Allowance of December 1966 to the average pay at the time of retirement on superannuation announced in the budget for 1970–71 to Teachers under Aided Agencies and Local Bodies have been issued; and

(*b*) if not, the reasons therefor?

ஓய்வூதியத் தொகை

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மானிய உதவிபெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி மன்றங்களின் கீழ்ப் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு, அவர்கள் ஓய்வு காலத்தில் பெறும் சராசரி ஊதியத்துடன், 1966-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் அகவிலைப் படியை இணைத்து, அதிகரித்த ஓய்வூதியத் தொகை வழங்குவதென்று 1970-71 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரில் அறிவிக்கப் பட்ட செயற்குறிப்புக்குச் செயலுருக் கொடுத்து ஆணை பிறப்பிக்கப்பட்டு விட்டனவா?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, புதிய ஓய்வு ஊதிய விகிதம் எந்தத் தேதியிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு அமுலாகும் என்று அரசு கூற முடியுமா?

The Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN : The Government decided that in the case of the Government servants retiring from service on or after 26th February 1970, dearness allowance up to the level obtaining in December 1966 shall be reckoned as pay for the purpose of pension and gratuity. என்று ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கிறது.

The Government have decided that the above orders will be applicable to all teacher pensioners in non-Government service also including teacher pensioners of aided Colleges.

[31st January 1972

திரு. எம். ராஜா அய்யர்: 26—2—1970-க்குப் பின்னால் ஓய்வு பெற்ற தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கெல்லாம் அவர்களுடைய ஊதியத்திலும் இந்த டி.ஏ. கொடுக்கலாம் என்று அரசு ஆணை இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அரசாங்கப் பள்ளி, கல்லூரிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு எந்த விகிதத்தில் தரப்படுகிறதோ அதே விகிதத்தில் என்று சொல்லப்பட்டிருப்பதால் அது பொருந்தும்.

Tetanus

* 69 Q.—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the operation theatres both at Government Raja Mirasdar Hospital and the Thanjavur Medical College Hospital were closed during the later half of 1970 consequent on attack of Tetanus; and

(*b*) if so, number of patients who died due to the above infection and the number of days the above theatres were kept closed?

நரப்பிசிவு நோய்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் ராஜா மிராசுதார் அரசு மருத்துவமனையிலும், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் உள்ள அறுவை சிகிச்சைக் கூடங்கள் 1970 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நரப்பிசிவு நோய் (Tetanus) பரவியதன் விளைவாக மூடப்பட்டன என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், மேற்சொன்ன நோய் தொற்றியதன் காரணமாக இறந்த நோயாளிகளின் எண்ணிக்கை யாது? எத்தனை நாட்கள் மேற்படி அறுவை சிகிச்சைக் கூடங்கள் மூடப்பட்டிருந்தன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இசிவு நோய் கண்டதன் விளைவாக தஞ்சாவூர் இராஜா மிராசுதார் மருத்துவமனையின் அறுவை சிகிச்சை கூடம் (1970-ஆம் ஆண்டின் பின் பாதியில்) மூடப்படவில்லை. ஆனால், இசிவுநோய் கண்டதனால் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் உள்ள அறுவைச் சிகிச்சைக் கூடங்கள் 1970 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் மூடப்பட்டன.

(இ) 55 வயதுள்ள சுப்பிரமணியம் என்ற ஒரே நபர் மட்டும் இறந்தார். தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் அறுவைச் சிகிச்சைக் கூடங்கள் அதன்காரணமாக கீழ்க்காணும் நாட்களில் மூடப்பட்டிருந்தன:

அறுவை சிகிச்சைக்கூடம்	A	10-9-1970 முதல் 22-9-1970 வரை (13 நாட்கள்)
,, ,,	A	23-11-1970 முதல் 7-4-1971 வரை (136 நாட்கள்)
,, ,,	B	15-9-1970 முதல் 22-9-1970 வரை (8 நாட்கள்)
,, ,,	C	15-9-1970 முதல் 22-9-1790 வரை (8 நாட்கள்)